பிறகு ஏற்பட்ட ஏதோ விளைவுகளின் காரணமாக இரும்பு ஆலை உருட்டு ஆலையாக மாறி ஓடிக் கொண்டிருக்கிறது. இரும்பு ஆலையாகத்தான் அது வரவேண்டும், அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை.

429—(*வினா எண். 11136) **திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில் மிகவும் பின் தங்கிய பகுதி. தமிழகத்தின் பல ஊர் களுக்கும் என் பகுதியிலிருந்துதான் மல்லிகைப்பூ செல்கிறது. முல்லை அரும்பும் செல்கிறது. இந்த மலர்கள் எல்லாம் காடு வெட்டி, சின்னப்புகழேரி, பெரிய புகழேரி, கண்டமங்கலம், வீரவ நல்லூர் போன்ற கிராமங்களிலிருந்தும், என் பகுதியை அடுத் துள்ள பக்கத்து கிராமங்களான இராசப்புலியூர், மீன்சுருட்டி, குடி காடு, பாப்பாகுடி போன்ற கிராமங்களிலிருந்தும், தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் வந்து கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே எந்தத் தொழிற்சாலை

1987 ஏப்ரல் 21]

யும் அமைக்கப்படவில்லை. அதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து எந்த நடவடிக்கையும் இந்த அரசு எடுக்கவில்லை. என்னுடைய தொகுதியில் மல்லிகை மலர்கள் அதிகமாக உற்பத்தியாவதால் தயவு செய்து மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை அங்கே அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டு மென்பது நல்ல எண்ணம்தான், நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றுதான். என்னுடைய தொகுதியான பனைமரத்துப் பட்டியலில் நிறைய மல்லிகைப்பூ உற்பத்தியாகிறது. இருந் தாலும் அங்கே அதற்கு தொழிற்சாலை எதுவும் அமையவில்லை. இப்போது தொழிற்சாலை அமையவிருக்கிற இடம் தென்காசி. அது அரசுத் துறையில் வெளிநாட்டு கூட்டுறவோடு அமைய ஏற்பாடு செய்திருக்கிறோம். அது வெற்றிபெறுமானால் பல இடங்களில் அந்தத் தொழிற்சாலையை உருவாக்குவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

திரு. சா. ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அரசுத் துறை மூலமாகச் செயல்படுத்த முடியாது என்றாலும் கூட்டுறவுத் துறை மூலமாக அந்த சென்ட் தயாரிக்கும் தொழிற் சாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மூலமாக முயற்சி செய்யலாம். அதைவிட தனியார் யாராவது முன்வந்தால் அதற்கு ஆவன செய்வதற்கு அரசு தயாராக இருக்கும்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தையொட்டி தஞ்சை மாவட்டம் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் அதிகமான விவசாயிகள் மல்லிகைப் பூவை உற்பத்தி பண்ணுகிறார்கள். மல்லிகைப்பூ விவசாயத்திற்கு விவசாயிகள் இரவும் பகலும் உழைக்கவேண்டிய

கஷ்டம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது தொழிற்சாலையை தென்காசியில் ஆரம்பிப்ப தாகச் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது தென்னாற் காடு, தஞ்சை மாவட்டங்களில் உற்பத்தியாகிற மல்லிகைப்பூ அனைத்தையும் அரசாங்கமே விவசாயிகளுக்கு நன்மை கிடைக் கக்கூடிய வகையில் வாங்கி, தனியார் குறைந்த விலைக்கு வாங்கு வதைத் தடுத்து, அவர்களுக்குக் கட்டுப்படியான விலை கொடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தொழிற்சாலை அமைப் பதைப் பற்றி பின்னாலே யோசித்தாலும் கூட, தென்காசி தொழிற்சாலைக்கு அந்தப் பூக்களைக் கொள்முதல் செய்து விவசாயிகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மல்லிகைப்பூ விவசாயம் செய்கிற விவசாயிகள் நல்ல பலனைப் பெறுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் மல்லிகைப்பூ விவசாயம் செய்கிற விவசாயி எங்கள் மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 18 ஆயிரம் ரூபாய் பெறுகிறார். ஆகவே அதுவே நல்ல விலை தான், விலையிலே ஒன்றும் பிரச்னை இல்லை. அவைகளுக்கு மார்க்கெட் வேண்டுமென்றால் எல்லா மல்லிகைப்பூ விலும் எஸ்ஸன்ஸ் இறங்குவதில்லை என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அது அந்தந்த மண்வாகைப் பொறுத்தது. தென்காசியில் அந்த செண்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலாதாரமான பொருள்கள் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். வெளிநாட்டு கூட்டுறவும் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதன் மூலம் அந்தத் தொழிற்சாலை 1¼ கோடி ரூபாயில் உருவாகவிருக் கிறது. அது வெற்றி பெறுமானால் மேற்கொண்டு பல தொழிற் சாலைகளை ஏற்படுத்தலாம். ஏனென்றால் வெளிநாட்டில் இதற்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, தென் காசியில் மல்லிகைப்பூ தொழிற்சாலை வருமென்று அறிவிக்கப் பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும், எங்களுக்கு இன்னமும் அது எட்டாக்கனியாகத்தான் இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வெளிநாட்டு நிபுணர்கள் வந்தபோது அவர்கள் கூறிய

1987 ஏப்ரல் 21]

கருத்துக்கள் அடிப்படையில் நல்ல நிலத்தைதேர்ந்தெடுப்பதற்கு நானும் அவர்களுடன் சென்று வந்தேன் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமென்று நம்புகிறேன். அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலமாக ஏராளமாக கடன் வாங்கிக் கொடுத்து தென்காசி பூராவும் பூக்களின் மணம் மணந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் தொழிற்சாலையை இன்னமும் காணவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அறிவிக்கப்பட்டும் இன்னமும் நில ஆர்ஜிதமோ அல்லது அதற்கான உத்தரவோ வெளியிடப்படவில்லை. இந்த காலதாமதத்திற்கு காரணம் என்ன? அந்தத் தொழிற்சாலை எப்போது வருமென்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இனிமேல் காலதாமதம் ஏற்படாது. 16—3—1987 அன்று அரசாணை எண். 330 மூலமாக ஆணை பிறப்பித்தாகிவிட்டது. இனிமேல் தொழிற்சாலை வேகமாக வளரும்.

(முற்பகல் 10-30)

முன்சீப்—மாஜிஸ்டிரேட் ஒருங்கிணைப்புத் திட்டம்

430—(*வினா எண். 2382) **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முன்சீப்—மாஜிஸ்ட்ரேட் ஒருங்கிணைப்புத் திட்டத்தை அமுலாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்சீப்-மாஜிஸ்ட்ரேட் ஒருங்கிணைப்புத் திட்டத்தை வழக்கறிஞர்கள் சங்கமும் பெரும் பகுதி வழக்கறிஞர்களும் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். நடைமுறையில் வழக்குகள்

@ 511—513 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.